Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 07 [23-10-1993] சனிக்கிழமை ஓசை 247

## யாழ். பல்கலைக் கழகத்திற்கு பெரும் நிதி நெருக்கடி

யாழ். பல்கலைக் கழகத்திற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் இவ் வருடத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முழுவதினையும் வழங்க திறைசேரி தவறியதால் பல்கலைக்கழகம் பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இவ் வருடத்திற்கு 115 மில்லியன் ரூபா நிதி தேவையென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் கோரியபோதும் 79 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அந் நிதியிலும் 74 மில்லியன் மட்டுமே இதுவரையில் திறைசேரி வழங்கியுள்ளது. இந் நிலையில் திறைசேரியால் வழங்கப்படாத ஐந்து மில்லியன் ரூபாவையும், மேலும் செலவினத்தைச் சமாளிக்கத் தேவையான 36 மில்லியன் (3ஆம் பக்கம் பார்க்க)

# வடபிராந்திய ராணுவத் தளபதி விரைவில் மாற்றப்படலாம்

## சிசில் ஆதரவாளர் நியமனம்?

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவ பிராந்திய தளபதிகள் மட்டத்தில் பல மாற்றங்கள் இடம் பெறவுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கமைய வடபிராந்திய தளபதியும் விரைவில் மாற்றப்படவுள்ளதாக தெரியவருகிறது. தற்பொழுதுள்ள இராணுவ படையணிகளின் நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்யும் நோக்குடனேயே இந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இம்மாற்றங்கள் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவின் விருப்பத்தின் பேரில் இடம் பெறுவதாகவும் தெரியவருகின்றது,**

சிறிலங்கா இராணுவ பிராந்திய தளபதிகள் மட்டத்தில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்பொழுது இருக்கும் இராணுவ படையணிகளின் நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்யும் நோக்குடனேயே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது.

தற்போதைய இராணுவத் தளபதிசிசில்வைத்தியரெட்னா தனது கட்டளையிடல், மற்றும் படை நடத்தல் செயற்பாடுகளுக்கு ஏற்றவகையிலும் இம்மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாற்றங்களின் முதற்கட்டமாக கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக தற்போது கடமையாற்றிவரும் பிரிகேடியர் லக்கி அல்கம மிக விரைவில் வடபிராந்திய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது. இவர் சிசில் வைத்தியரெட்னா தெற்கில் ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த வேளை அவருக்கு மிக

(3ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலைப் பகுதியிலிருந்து ஆறு பொதுமக்கள் விடுவிப்பு

(வடமராட்சி)

மாதகல், இளவாலைப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின்போது கைது செய்யப்பட்டு பதினைந்து மாதங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் ஆறு பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

பர்ணாந்து பிள்ளை மாகிறட் (வயது 60) இளவாலை, பர்ணாந்துபிள்ளை (வயது81) இளவாலை பழனி மகாதேவி (வயது 75) சிறுவிளான் இளவாலை, மிக்கேல் பிள்ளை கிறிஸ்ரினா (வயது 65) இளவாலை, வின்சர் முத்தையா

(3ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கிளை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிமுல்லைத்தீவுமாவட்டங்களுக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கிளை கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கீழ் சில ஆண்டுகளுக்கு முன்னர் இப்பிரதேசங்கள் இயங்கியது தெரிந்ததே. எனினும் போக்குவரத்து தொடர்பாக ஏற்பட்ட சிரமத்தினால் அநுராதபுரம் செஞ்சிலுவைச் சங்க கிளையின் கீழ் இப்பிரதேச வேலைகள் கொண்டுவரப்பட்டு தற்போது வாரத்

[3ஆம் பக்கம் பார்க்க]

# 205 கோடி மேலதிக நிதி முப்படைகள் கோருகின்றன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்காக முப்படைகளும், பொலிசும் தமக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட மேலும் 205 கோடி ரூபா அதிகமாகதேவை என அரசிடம் கோரியுள்ளன. தேசிய சிவில் பாதுகாப்பிற்கென 22 கோடி ரூபா பெறப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு பகுதிகளின் எல்லைப் பகுதிகளில் உள்ள ஊர்காவற்படைக்கும் மற்றும் கடற்படையினருக்கும் சம்பளம் வழங்க இந்த 22 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது

இராணுவத்திற்கு 64 கோடியே 64 லட்சத்து 64ஆயிரத்து 808 ரூபா மேலதிக

(3ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கு அனுமதியில்

## மோட்டார் ஊர்தி பதிவு காலஎல்லை நீடிப்பு

மோட்டார் ஊர்திப்பதிவிற்கான காலஎல்லை எதிர்வரும் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலை மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினர் மோட்டார் வாகன உரிமையாளருக்கு விடுத்துள்ளனர்

இதற்கான கால எல்லை இன்று என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்ட நீதிமன்றம் வைபவரீதியாக திறப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். கோவில் வீதியில் யாழ்ப்பாணம் தமிழீழ மாவட்ட நீதிமன்றம் இன்று வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் திறப்பு விழா வைபவம் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும் என தமிழீழ வடுதலைப் புலிகள் நீதிநிர்வாகத் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இரு பெண் போராளிகள் பொன்னாலையில் வீரச்சாவு

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இரவு பொன்னாலைப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலின்போது இரு பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் ஒளிஇழை/லஜனி [சோமநாதன்பிள்ளை பரமேஸ்வரி பாலிப்போடியார் வீதி சந்திவெளி மட்டக்களப்பு], லெ டினன்ட் கோதை [சின்னத்தம்பி சாரதாதேவி முனைக்காடு கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு] ஆகிய இவ்விரு பெண் போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் ஒளிஇழை/லஜனி



லெப். கோதை

சிறிலங்கா இராணுவ பிராந்திய தளபதிகள் மட்டத்தில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்பொழுது இருக்கும் இராணுவ படையணிகளின் நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்யும் நோக்குடனேயே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது.

தற்போதைய இராணுவத் தளபதிசிசில்வைத்தியரெட்னா தனது கட்டளையிடல், மற்றும் படை நடத்தல் செயற்பாடுகளுக்கு ஏற்றவகையிலும் இம்மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாற்றங்களின் முதற்கட்டமாக கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக தற்போது கடமையாற்றிவரும் பிரிகேடியர் லக்கி அல்கம மிக விரைவில் வடபிராந்திய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவாரென தெரியவருகின்றது. இவர் சிசில் வைத்தியரெட்னா தெற்கில் ஜே. வி. பிக்கு எதிரான நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த வேளை அவருக்கு மிக

(3ஆம் பக்கம் பார்க்க)

...போக்குவரத்து தொடர்பாக ஏற்பட்ட சிரமத்தினால் அநுராதபுரம் செஞ்சிலுவைச் சங்க கிளையின் கீழ் இப் பிரதேச வேலைகள் கொண்டுவரப்பட்டு தற்போது வாரத்

[3ஆம் பக்கம் பார்க்க]

...போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் ஒளிஇழை/லஜனி [சோமநாதன்பிள்ளை ... ஆகிய இவ்விரு பெண் போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் ஒளிஇழை/லஜனி



லெப். கோதை

## இளவாலைப் பகுதியிலிருந்து ஆறு பொதுமக்கள் விடுவிப்பு

(வடமராட்சி)

மாதகல், இளவாலைப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்டு பதினைந்து மாதங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் ஆறு பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

பர்ணாந்து பிள்ளை மாகிறட் (வயது 60) இளவாலை, பர்ணாந்துபிள்ளை (வயது81) இளவாலை பழனி மகாதேவி (வயது 75) சிறுவிளான் இளவாலை, மிக்கேல் பிள்ளை கிறிஸ்ரினா (வயது 65) இளவாலை, வின்சர் முத்தையா

(3ஆம் பக்கம் பார்க்க)

# 205 கோடி மேலதிக நிதி முப்படைகள் கோருகின்றன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்காக முப்படைகளும், பொலிசும் தமக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட மேலும் 205 கோடி ரூபா அதிகமாகதேவை என அரசிடம் கோரியுள்ளன. தேசிய சிவில் பாதுகாப்பிற்கென 22 கோடி ரூபா பெறப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு பகுதிகளின் எல்லைப் பகுதிகளில் உள்ள ஊர்காவற்படைக்கும் மற்றும் கற்படையினருக்கும் சம்பளம் வழங்க இந்த 22 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது

இராணுவத்திற்கு 64 கோடியே 64 லட்சத்து 64ஆயிரத்து 808 ரூபா மேலதிக

(3ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கு அனுமதியில் மாற்றம் செய்யவேண்டும்

### டி. பி. விஜேதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதுள்ள பல்கலைக்கழக அனுமதி முறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். நேற்று றோயல் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறுகுறிப்பிட்டார்.

தகுதிக்கு இடமளிக்கும் வகையில் இந்த பல்கலைக்கழக அனுமதி முறையை உயர்கல்வி அமைச்சு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். மாணவர் அனுமதி முறையில் இனவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பின்தங்கிய மாவட்டங்களுக்கான அனுமதி முழு அனுமதிக்கும் பின்னர் தனியான ஒரு விசேட அனுமதி முறையாக தகுதி அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

# சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்க கொமன்வெல்த்திடம் கோரிக்கை

இலங்கையிலுள்ள சிறுபான்மை தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை அங்கீகரிக்குமாறு மீண்டும் விடுதலைப் புலிகள் பொதுநலவாய அமைப்பு [கொமன்வெல்த்] நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளனர். பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கூட்டம் தற்போது சைப்பிரசில் நடைபெற்று வருகிறது.

பெப்ரவரியில் ஜெனீவாவில் நடைபெற்ற மனிதஉரிமைகள் மாநாட்டில் 15அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதையும் விடுதலைப் புலிகள் பொதுநலவாய அமைப்புக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"இலங்கைத் தமிழ் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை பொதுநலவாய அமைப்பு அங்கீகரிக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் சைப்பிரசில் தற்போது கூடியுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களை கேட்டுள்ளனர் இந்நிலையில் சிறிலங்கா அரசோ ஆசியாவில்தற்போது மிகநீண்ட காலமாக நடக்கும் உள்நாட்டுப்போர்எனக் குறிப்பிடும் இப்போரில் இராணுவத் தீர்வை காண்பதிலேயே தற்போது தீவிரமாக இருக்கின்றது" என பி. பி. ஸி. செய்தியாளர் சியாகா நுவோஸ்

[4ஆம் பக்கம் பார்க்க]

### விபத்தில் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை இசையாளன்/சுமன் [மனுவல் கஜேந்திரன் - இல. 59, பீச்றோட் தொடர்மாடிக் கருகாமை குருநகர் யாழ்ப்பாணம்] இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கை இசையாளன்/சுமன்

மயிலந்தனை படுகொலை

### 24 இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டனர்

மயிலந்தனையில் கடந்த வருடம் கிராமவாசிகள் 35 பேரை படுகொலை செய்ததாக 24 இராணுவத்தினருக்கு எதிராக சட்டமா அதிபர் தொடர்ந்துள்ள வழக்கில் பொலநறுவை நீதிமன்றத்தில் நடைபெற்ற பூர்வாங்க விசாரணையில் எதிரிகளான 24 இராணுவத்தினரும் சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டனர்.

மேல் விசாரணை டிசம்பர் 16ஆம், 17ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

பல்கலை. மானியக்குழுவின் நடவடிக்கையால்

# பாதிக்கப்பட்ட மாணவர் வியாழனன்று ஊர்வலம்

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு பல்கலைக் கழகங்களுக்கு 91/92 கல்வி ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டு மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

ஆணைக்குழுவின் இந் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மாணவர்களால் நடாத்தப்படவுள்ள இவ் ஊர்வலத்தில் இவர்களுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் வியாழக்கிழமை கலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகம் முன்பாக ஆரம்பமாகும் இவ் ஊர்வலம் சிவன்கோவில் வீதியூடாக கோவில் வீதியை அடைந்து அதன்வழியே ஆஸ்பத்திரி வீதியை வந்தடைந்து அதன் வழியாக கண்டி வீதி வழியாக யாழ். செயலகத்தை வந்தடையும் அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதி வழியாக யாழ். கல்வித்திணைக்கழத்தை வந்தடைந்து அங்கிருந்து மீண்டும் யாழ். பல்கலைக் கழகத்தை சென்றடையவுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக யாழ். பல்கலைக்

(3ஆம் பக்கம் பார்க்க)

### தமிழனே!

உரிமைக்காக உயிர் கொடுப்பது
உன்னதமானது.
விடுதலைக்கான வித்தாக விழுவது
வீரியம் மிக்கது.
வா தமிழா
உனக்கும் ஒரு வரலாறு இருக்கட்டும்

# 500 தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசாங்கம் முடிவு

1992ஆம்ஆண்டுசுவிஸர்லாந்திற்கு அகதிகளாகச் சென்ற தமிழர்களில் 500 பேரை திருபபிஅனுப்பிவைக்கசுவிஸர்லாந்துஅரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இவர்களில் 100 பேர் இந்த வருட முடிவிற்குள்ளும், ஏனையோர் 1994ஆம் ஆண்டிலும் திருப்பி அனுப்பப்பட இருக்கின்றனர்.

சுவிஸர்லாந்து அரசாங்கம் முதலில் திருப்பியனுப்ப விருக்கும் 100 பேர் பற்றிய விபரங்களை இலங்கைக்கான தூதுவராலயம் இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் இந்த 100 தமிழ் அகதிகளையும் கொழும்பில் நலன்காப்பு நிலையமொன்றில் வைத்து பராமரிப்பதற்காக தொண்டர் நிறுவனங்களின் உதவியை கோரியுள்ளார்.

இவர்களை கொழும்பில் வைத்துப் பராமரிப்பதற்கு பல்வேறு ஸ்தாபனங்களின் உதவிகளை பெற்றுக்கொள்வது பற்றியும்ஆலோசனைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக அரசாங்க உயர்அதிகாரிகள் கொழும்பில் இயங்கிவரும் சில தொண்டர் ஸ்தாபனங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். ஆனால்இதுவரை எந்தவொரு ஸ்தாபனமும் இந்தப் பாரிய பொறுப்பை ஏற்பதற்கு முன்வரவில்லை என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## வரி விளம்பரம்

### உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை; கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி7570)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டு தரப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம்.

(6326)

### யாழோசை இசை வகுப்புகள்

சகல புதிய இசை வகுப்புகளும் 24-10-93 விஜயதசமியன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். யாழோசை 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(6306)

### தீபாவளி வெளியீடுகள் வாழ்த்துக்கள்

இந்திய, இலங்கைக் கவிதைகள் சஞ்சிகைகள், பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், பத்திரிகைகள் தீபாவளி வாழ்த்துக்கள். அக்டோபரில் வியாழன், சனி, செவ்வாய் மாற்றப்பலாபலன்களும் ரூ. 10/- விற்பனையாகின்றன. மது புத்தகசாலை கொக்குவில் சந்தி (6359)

### நுளம்புத் தொல்லையா

இரவில் நீம்தூபம் புகைக்கிறோம். நிம்மதியாக நித்திரை கொள்கிறோம். எமக்கில்லை நுளம்புத்தொல்லை: பாவியுங்கள் "நீம் தூபம்" பக்கற் ஒன்று ரூ.3/-. 25 பக்கற்கொண்ட அட்டை ரூபா. 60/- மட்டுமே அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. "மில்க்வைற்"

(சி/7794)

### உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியா

## அன்பான வேண்டுகோள்:

18-10-93 அன்று பூநகரியில் இருந்து கிளாலிக்கரை நோக்கி பயணம் செய்கையில் முக்கிய பொருள்களும் எனது கடமை தொடர்பான முக்கிய தஸ்தாவேதுக்களும் அடங்கிய பிரயான பையினை சின்னப்பு சிவபாலசுப்பிரமணியம் ஆகிய நான் தவறவிட்டுவிட்டேன். இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் யாழ்ப்பாண காரியாலயத்தில் அல்லது சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்து உதவுமாறுகேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்

[சி-7767]

## "வடபிராந்திய பேக்கரி ஊழியர்கள் கவனத்துக்கு"

பேக்கரி ஊழியர்களின் நலன்களை காக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட வடபிராந்திய பேக்கரி ஊழியர்கள் பேரவையில் இன்னும் உறுப்பினராக சேர்ந்து கொள்ளாதவர்கள் உங்களது நலனுக்காக இப் பேரவையில் 31-10-93 க்கு முன்னதாக உறுப்பினராக சேர்ந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் அமைப்பு பேக்கரி உரிமையாளர்களுக்கும், பேக்கரி ஊழியர்களுக்கும் ஓர் இணைப்பாக செயற்படுமே தவிர உரிமையாளர்களுக்கு எதிரானது அல்ல. ஆகவே தாங்கள் தவறாது உறுப்பினராக சேர்ந்து கொள்ளுங்கள். எனவே உங்களது உறுப்புரிமையை பதிவு செய்து கொள்ளுவதற்கான பத்திரங்களை கீழுள்ள முகவரியிலுள்ள தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

"நன்றி"

**இடைக்கால நிர்வாகம்**

**"வடபிராந்திய பேக்கரி ஊழியர் பேரவை"**
**மணிமாமா பேக்கரி பில்டிங்**
**வல்லவன் வீதி**
**இணுவில்.**

[6354]

## நினைவு கூருகின்றோம்... 1993- 10- 23

1987ஆம் ஆண்டு யாழ் - கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். வீரமணி** (சந்திரசேகரம் தமிழ்ச்செல்வன் - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)

**ஜசமன்** (கனகலிங்கம் சிவதர்சகுமார் - 21, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி - யாழ்)

1988ஆம் ஆண்டு மணலாறு - நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப் படையினரின் கண்ணிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய,

**சுகந்தன்** (சிற்றம்பலம் பரஞ்சோதி - பன்குளம் - திருமலை)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றேமன்** (இராமானுஜம் சீதாராம் - புலோலி தெற்கு, பருத்தித்துறை - யாழ்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம லெப் அப்பன்** (கதிர்காமநாதன் கலைச்செல்வன் - வண்ணாங்கேணி - பளை)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கமலா** (நந்தினி சோதி - வண்ணாங்குளம் மணலாறு)

பளைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**சகாதேவன்** (அருளம்பலம் கந்தசாமி - புல்லுமலை - மட்டு)

மட்டு - களுவாங்கேணி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த சிறுமி, கடற்றொழிலாளி, இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் பலியான வந்தாறுமூலையைச் சேர்ந்த இளம்பெண், மற்றும் களுவாங்கேணி வாசியான இளைஞன் உட்பட 04 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து வைத்தியமனையில் வீரச்சாவெய்திய,

**கப்டன் மைக்கல்** (வேலையா சுரேஸ்குமார் - 60, சிவன் வீதி, - திருமலை)

1992ஆம் ஆண்டு வவுனியா மாமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். தங்கத்துரை** (தியாகராசா மேகரஞ்சன் - செட்டிகுளம் - வவுனியா)

**2 ம்லெப் நாகராசா** (சுப்பிரமணியம் கணேஷ் - கணேசபுரம் - வவுனியா)

ஒட்டகப்புலம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் அன்பு / சயந்தன்** (வினாசித்தம்பி செல்வரூபன் - கோப்பாய் தெற்கு - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி'7761)

## சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்காதேவி தேவஸ்தானம்

அன்புடையீர்;

25-10-93 திங்கள் முதல் 27-10-93 புதன் வரை மகாநவசண்டிஹோமம் நடைபெறும்.

ப. மகாகணபதிசர்மா
தர்மகர்த்தா

[6348]

## ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

## முக்கிய அறிவித்தல்

**விசேட பொதுக்கூட்டம் 6-11-1993**
**கிளைக்குழுத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும்**

## முதலாவது பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்) 6-11-93 சனிக்கிழமை மு. ப. 10 00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்சபைப் பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சிநிரலில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, நிகழ்ச்சிநிரல் கிடைக்கப்பெறாத பொதுச்சபைப்பிரதிநிதிகள் மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சங்க செயலாளருடன் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிநிரலைப் பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்
(சி-7759)

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

### 1992 / 93 கல்வி ஆண்டுக்கான வயதுமுதிர்ந்த அபேட்சகர்கள்/ கண்பார்வையற்ற அபேட்சகர்கள்/ படிப்பு தவிர்ந்த பிற துறைகளில் திறமைவாய்ந்த அபேட்சகர்கள்/ வலது குறைந்த அபேட்சகர்கள்/ முதற்பட்டங்கள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோருக்கான அனுமதி

1992/93 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான இடங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை கீழ்வரும் வகை மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பெற்றுக் கொள்ளும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் இதன் இறுதியில் காணப்படும் மாதிரிப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்டு 1993 ஒக்டோபர் 31ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இல. 20, உவாட்டு இடம், கொழும்பு 07 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விசேட ஏற்பாட்டின் கீழ் அனுமதி" என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) வயது முதிர்ந்த அபேட்சகர்கள்

அனுமதிக்குப் பரிசீலிப்பதற்கு ஒரு வயது முதிர்ந்த அபேட்சகர் 1991 ஆகஸ்ட்டில் (வழமையான) அல்லது 1992 ஏப்ரலில் (விசேட) நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த)

அவ்வாறு அனுமதிக்கப்படும் பட்டதாரிகள் அனைவரும் விதித்துரைக்கப்பட்ட கற்கைக் கட்டணங்களையும், தேர்வுக் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

பட்டச்சான்றிதழின் பிரதியொன்றை தவறாது விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

செயலாளர்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இல. 20,
உவாட் இடம்,
கொழும்பு 07.
01- 10- 1993

(சி-7755)

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**1992/93 கல்வி ஆண்டுக்காக வயது முதிர்ந்த அபேட்சகர்கள்/கண் பார்வையற்ற அபேட்சகர்கள்/படிப்பு தவிர்ந்த பிறதுறைகளில் திறமை வாய்ந்த அபேட்சகர்கள்/ முதற் பட்டங்கள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோருக்கான அனுமதி**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: ................
02. முகவரி: ................
03. (i) பிறந்த திகதி: ................
(ii) 1993. 10. 31 ஆந் திகதி வயது : வரு: ——— மாதம்: ——— நாள்: ———
04. 1991 ம் ஆண்டில் க.பொ.த. [உ/த] பரீட்சை பெறுபேறுகள்: ..........
(1991 ஆகஸ்ட் (வழமையான) பரீட்சை அல்லது 1992 ஏப்பிரல் (விஷேட)பரீட்சை)

வியாழன், சனி, செவ்
வாய் மாற்றப் பலா பலன்
களும் ரூ. 10/- விற்பனையா
கின்றன. மது புத்தகசாலை
கொக்குவில் சந்தி (6359)


## நுளம்புத் தொல்லையா

இரவில் நீம்தூபம் புகைக்கிறோம். நிம்மதியாக நித்திரை கொள்கிறோம். எமக்கில்லை நுளம்புத்தொல்லை: பாவியுங்கள் ''நீம் தூபம்'' பக்கற் ஒன்று ரூ.3/-. 25 பக்கற்கொண்ட அட்டைடரூபா. 60/- மட்டுமேஅண்ணாகோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்''
(சி/7794)


## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில், உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியை எதிர்த்துயாழ் மட்டுவில்மகாவித்தியாலயமும்யாழ் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை எதிர்த்து யாழ்நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், யாழ் இந்துக்கல்லூரியை எதிர்த்து இமையாணன் அ. த. க பாடசாலையும் விளையாடவுள்ளன. யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் புனித யோசப் மகாவித்தியாலயத்தை எதிர்த்து புங்குடுதீவு மகாவித்தியாலயமும் இளவாலை மெய்கண்டானை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் டிறிபேக்கல்லூரியை எதிர்த்துசண்டிலிப்பாய் மகாவித்தியாலயமும் விளையாடவுள்ளன. மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து புங்குடுதீவு மகாவித்தியாலயமும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தை எதிர்த்து உரும்பராய் இந்துக்கல்லூரியும் விளையாடவுள்ளன.

## வயிற்றோட்டத்தால் பன்னிருவர் பாதிப்பு

(தொல்புரம்)

தொல்புரம் மேற்கு கொட்டியாவத்தை, வீராவத்தை ஆகிய பகுதிகளில் 1 2 பேர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் இந்நோயாளரில் சிலரின் நிலை 'தேறிவருவதாகத் தெரியவருகிறது. மேலும் இக்கிராமங்களில் நோயினைப் பரவாமல் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திரு என். விவேகானந்தன் தலைமையில், சுகாதாரத் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று தீவிரமாக செயல்பட்டுவருகின்றது. (41)

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 1992/93 கல்வி ஆண்டுக்கான வயதுமுதிர்ந்த அபேட்சகர்கள்/ கண்பார்வையற்ற அபேட்சகர்கள்/ படிப்பு தவிர்ந்த பிற துறைகளில் திறமைவாய்ந்த அபேட்சகர்கள்/ வலது குறைந்த அபேட்சகர்கள்/ முதற்பட்டங்கள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோருக்கான அனுமதி

1992/93 கல்வி ஆண்டில் டல்கலைக்கழகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான இடங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை கீழ்வரும் வகை மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பெற்றுக் கொள்ளும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் இதன் இறுதியில் காணப்படும் மாதிரிப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்டு 1993 ஒக்டோபர் 31ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இல. 20, உவாட்டு இடம், கொழும்பு 07 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''விசேட ஏற்பாட்டின் கீழ் அனுமதி'' என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

### (அ) வயது முதிர்ந்த அபேட்சகர்கள்

அனுமதிக்குப் பரிசீலிப்பதற்கு ஒரு வயது முதிர்ந்த அபேட்சகர் 1991 ஆகஸ்ட்டில் (வழமையான) அல்லது 1992 ஏப்ரலில் (விசேட) நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும். அனுமதி கலை, வணிகவியல், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கு மட்டுமே பரிசீலிக்கப்படும். 1993-10-31ஆந் திகதியன்று 25 வயதினை எய்திய அபேட்சகர் மட்டுமே விண்ணப்பிக்க உரித்துடையவராவர்.

### (ஆ) பார்வையற்ற மற்றும் வலது குறைந்த அபேட்சகர்கள்

(i) 1991 ஆகஸ்ட்டில் (வழமையான) அல்லது 1992 ஏப்பிரலில் (விசேட) நடாத்தப்பட்ட க. பொ த (உ. த.) பரீட்சையில் பிறெய்ல் (Braille) முறையில் பரீட்சை எழுதி அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்திப்படுத்திய பார்வையற்ற அபேட்சகர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார். இவ் அபேட்சகர் கலை,சட்டம் ஆகிய கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்பட மட்டுமே பரிசீலிக்கப்படுவர்

(ii) வலது குறைந்த அபேட்சகர் அனுமதி விடயத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அபேட்சகரின் சொந்தத் திறமைகளைக் கொண்டே ஒவ்வொரு விண்ணப்பமும் பரிசீலிக்கப்படும். எவ்வாறாயினும் அனுமதிக்குப் பரிசீலிக்கப்பட அபேட்சகர் 1991 ஆகஸ்டில் (வழமையான) அல்லது 1992 ஏப்பிரலில் (விசேட) நடாத்தப்பட்ட க. பொ. த (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும்.

### (இ) படிப்புத் தவிர்ந்த பிற துறைகளில் திறமைவாய்ந்த அபேட்சகர்கள்

தேசிய / சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, கலை, சங்கீதம், நாடகம் ஆகியவற்றில் 1987ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னும் சிறப்புப்பெற்ற அபேட்சகர்மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார். இந்த ஏற்பாட்டின் கீழ் அனுமதிக்குத் தகுதியுடைய அபேட்சகர் 1991 ஆகஸ்டில் (வழமையான) அல்லது 1992 ஏப்பிரலில் (விஷேட) நடாத்தப்பட்ட க. பொ .த [உ. த.] பரீட்சையில் ஆகக் குறைந்த தகைமைகளைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும்

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமைகள் பின்வருமாறு
அனுமதிக்கு தகுதியுடைய ஓர் அபேட்சகர்.

(1) (அ) ஒரே அமர்வில் க.பொ.த. (உ.த.)ப்பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட 4 பாடங்களில் சித்தி.

அல்லது

(ஆ) க.பொ.த. [உ.த.]ப் பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட 3 பாடங்களில் சித்தியுடன் அதே அமர்வில் 4-வது அங்கீகரிக்கப்பட்ட பாடத்தில் 25%ற்குக் குறையாத புள்ளியைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(2) 4 பாடங்களுக்கும் 180ற்குக் குறையாத மொத்தத் திரட்டுப் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### (ஈ) பட்டதாரிகள்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் 1-ம் வகுப்பு அல்லது 2-ம் வகுப்பு [மேற்றர] பட்டத்தை முதற்பட்ட மட்டத்தில் பெற்றுக்கொண்ட பட்டதாரிகளாகவும் 1993. 10. 01ஆந் திகதியன்று 30 வயதிற்குக் குறைந்தவராகவும் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம் முன்னரே தோற்றிய ஒரு மாதிரிப் பரீட்சையின் அல்லது முதற்பட்டத் தேர்வின் பெறுபேற்றை செம்மை செய்வதன் நோக்குடன் கற்கைப் பயிற்சி நெறியொன்றினை மீண்டும் செய்ய பட்டதாரிகள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் பல்கலைக்கழகங்களில் வெற்றிடங்கள் இருந்தால் மட்டுமே அந்தப் பாடநெறிகளின் அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அவ்வாறு அனுமதிக்கப்படும் பட்டதாரிகள் அனைவரும் விதித்துரைக்கப்பட்ட கற்கைக் கட்டணங்களையும், தேர்வுக் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

பட்டச்சான்றிதழின் பிரதியொன்றை தவறாது விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

செயலாளர்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இல. 20,
உவாட் இடம்,
கொழும்பு 07.
01- 10- 1993

(சி-7755)

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### 1992/93 கல்வி ஆண்டுக்காக வயது முதிர்ந்த அபேட்சகர்கள்/கண் பார்வையற்ற அபேட்சகர்கள்/படிப்பு தவிர்ந்த பிறதுறைகளில் திறமை வாய்ந்த அபேட்சகர்கள்/ முதற் பட்டங்கள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோருக்கான அனுமதி

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: ..............................
02. முகவரி: ..............................
03. (i) பிறந்த திகதி: ..............................
(ii) 1993. 10. 31 ஆந் திகதி வயது : வரு: ——— மாதம்: ——— நாள்: ———
04. 1991 ம் ஆண்டில் க.பொ.த. [உ/த] பரீட்சை பெறுபேறுகள்: ..............
(1991 ஆகஸ்ட் (வழமையான) பரீட்சை அல்லது 1992 ஏப்பிரல் (விஷேட)பரீட்சை)

சுட்டிலக்கம் [ ] நிருவாக மாவட்டம் [ ]

மொத்தத் திரட்டுப் புள்ளி [ ]

| பாடங்கள் | தரம் |
| --- | --- |
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |

05. நீர் 1992/93 கல்வி ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு மேற்காணும் பெறுபேற்றில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளீரா? ..............................
தெரிவு செய்யப்பட்டுள்ளீராயின் விபரங்களைத் தருக.
கற்கை நெறி: ..............................
பல்கலைக் கழகம்: ..............................
06. விண்ணப்பத்திற்கான விசேட காரணம்/காரணங்கள் ..............................
..............................
[கற்கைநெறி அல்லாத ஏனைய துறைகளில் திறமை கொண்டவர்கள் விண்ணப்பப்படிவத்துடன் தம் சாதனைகளையும் எவ்வாண்டுகளில் அவற்றைப் பெற்றார்களென்றும் குறிப்பிட்ட விரிவான அறிக்கையொன்றினை இணைத்தல் வேண்டும்].
07. பரிசீலிக்கப்பட நீர் விரும்பும் கற்கை நெறியும் / கற்கை நெறிகளும் பல்கலைக் கழகமும் / பல்கலைக் கழகங்களும்.
[பரிசீலிக்கப்பட வேண்டிய கற்கை நெறியும் / கற்கை நெறிகளையும், பல்கலைக் கழகத்தையும் / பல்கலைக் கழகங்களையும் நீர் விரும்பும் விருப்ப ஒழுங்கில் குறிப்பிடவும். விண்ணப்பித்த பின் மாணவர் எவரும் விருப்ப ஒழுங்கை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்]

| கற்கை நெறி | பல்கலைக் கழகம் |
| --- | --- |
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |
| .............. | .............. |

08. நீர் எப்போதாவது உள்வாரி மாணவராக ஏதேனும் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொண்டீரா பதிவு செய்து கொண்டீராயின் அதன் விபரங்களைக் கீழே தருக. ..............................
09. நீர் பட்டதாரிகளுக்கான விசேட அனுமதியின் கீழ் விண்ணப்பிப்பதாயின் பல்கலைக்கழகமும் பெற்ற பட்டமும் குறிப்பிடப்படல் வேண்டும் [உறுதிப்படுத்தப்பட்ட பட்டச்.சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்]
பட்டம்: ..............................
பல்கலைக்கழகம்: ..............................
பட்டம் வழங்கப்பட்ட திகதி: ..............................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையென்றும் செம்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறே.ன்நான் க.பொ.த. [உ/த] பரீட்சைக்கு இவ்வனுமதிக்குக் கருத்தில் கொள்ளப்படும்க.பொ.த. [உ/த] பரீட்சை உட்பட மூன்று முறைக்கு மேல் தோற்றவில்லை என்றும்இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: ————————

————————
விண்ணப்பதாரியின் கையொப்பம்

## சிந்தனைக்கு

ஊக்கமுள்ள மனிதன், சாதனங்களைக் காண்பான் காண முடியாவிடில், அவற்றை உருவாக்குவான்.

– வில்லியம் டேனிங்.


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 2839 நிர்வாக பீடம் 2023

த பெ. எண் - 05


## சுதந்திரக் கட்சியின் புதிய கோலம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பார்வை திடீரென தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து திரும்பியுள்ளது. மேலும் கடந்த கால நிலைப்பாட்டில்இருந்து சற்று தனது நிலையை மாற்றியுள்ளதோடு, பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என பாராளுமன்றத்தில் அக்கட்சியினர் வற்புறுத்தியுமுள்ளனர்.

''தற்போதைய அரசு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை இன்று நாட்டில் உள்ள மிக முக்கியமான பிரச்சினை இனப்பிரச்சினையே ஆகும்'' என சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான அனில் முனசிங்கா பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

இதேவேளை, கிளாலி போக்குவரத்தை அரசாங்கம் தடை செய்ததைக் கண்டித்துப் பேசிய சுதந்திரக்கட்சி உறுப்பினர் அநுருத்த ரத்வத்த ''தமிழ் மக்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். இதற்கு காரணம் அரசாங்கத்தின் தவறான கொள்கையே ஆகும். வடக்கிலுள்ள மக்களை விடுதலைப்புலிகள் என ஒதுக்கி அவர்களுக்குப் பல பொருட்கள் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளது. மூன்று வருடகாலமாக வடக்கிற்கு மின்சாரம் இல்லை. ஏன் அவர்களுக்கு மின்சாரம் வழங்கக் கூடாது'' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுதந்திரக் கட்சியினருக்கு இனப்பிரச்சினை குறித்தும், தமிழ்மக்கள் மீதும் எழுந்துள்ள இத்திடீர்அக்கறையானது தமிழ் மக்கள் படும் கஷ்டத்தின் பால் எழுந்த இரக்கமாகவோ, அன்றி யுத்தத்தினால் நாடு பெரும் சீரழிவை எதிர்நோக்குகின்றது என்ற கவலையின் காரணமாகவோ எழுந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், இதுவரை முழுமையான இனவாத அரசியலை நடத்திவந்ததோடு, தற்பொழுதும் ஹெல உறுமய போன்ற சிங்கள பேரினவாத அமைப்பின் உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டும் உள்ளது.

இந் நிலையில், சுதந்திரக்கட்சியின் இந் நிலைப்பாடு மாற்றத்திற்கு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடே காரணமாக இருக்குமென கருத இடமுண்டு. அதாவது

## பல்கலை. மானியக்குழு மாற்றம் தென்பகுதியில் சர்ச்சை

(கொழும்பு)

பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு, அண்மையில் ஜனாதிபதியால் மாற்றியமைக்கப்பட்டமை தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பத்திரிகைகளும் ஜனாதிபதியின் இந்நடவடிக்கையை கண்டித்துள்ளன

சட்டத்திற்கமையவே ஜனாதிபதியினால் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு மாற்றி அமைக்கப் பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது 1985ஆம் ஆண்டு பல்கலைக் கழக திருத்த சட்டப்படி பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தலைவரும் ஏனைய அறுவரும் ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்டனர் ஜனாதிபதியின் இம்முடிவு முன்னைய ஆணைக்குழுவின் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் வாய்மூலம் அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்தே முன்னைய உறுப்பினர்கள் ராஜினாமாசெய்தனர்என ஜனாதிபதி செயலக அறிக்கை தெரிவித்தது.

ஜனாதிபதிக்கு தெரியாமல், அவரின் அங்கீகாரமின்றி மானிய ஆணைக்குழு மாற்றியமைக்கப்பட்டதாக சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் தவறு எனவும் அவ் அறிக்கை கூறுகிறது.

## தேர்தல் நியமனம் இன்றும் ஏற்கப்படும்

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளைக்குழுவிற்கான தேர்தல் நியமனப் பத்திரங்கள் இன்றும் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் கிளைக் குழு தேர்தல் எதிர்வரும் முப்பதாம் திகதியன்று நடைபெறுமெனவும் சங்கத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் சங்கானைப் பிரதேச நிலையத்தில் இரண்டாம் கட்ட இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தையல் பயிற்சி வகுப்புக்களில் சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, தொல்புரம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அநேக மாணவர்கள் பங்கு பற்றுகின்றனர். இவ் இலவசப்பயிற்சி முறையினால் பின் தங்கிய கிராமங்களில் வேலை வாய்ப்பற்றிருக்கும் யுவதிகளுக்கு சுய வேலை வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்பு எட்டியுள்ளதென சர்வோதய பிரதேச இணைப்பாளர் செல்வி கி. யோகேஸ்வரி தெரிவித்துள்ளார். (41)

# பலவருடமாககொழும்பில்வசிக்கும் தமிழர்களும் பொலிசாரால் கைது

[கொழும்பு]

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இரவு வேளைகளில் சிறிலங்காவின் முப்படைகளும் சுற்றி வளைக்க பொலிசார் தமிழர்களைக் கைது செய்து வருகின்றனர். இத்தகைய சுற்றி வளைப்பின்போது பல வருடங்களாக சொந்த வீட்டில் வசிக்கும் தமிழரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

நள்ளிரவு வேளைகளில் தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் தெகிவளை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு, கொம்பனித் தெரு வத்தளை, செட்டியார்தெரு, நாரஹென்பிட்டி, அன்டர்சன் தொடர் மாடி வீடமைப்பு திட்டம் ஆகிய பகுதிகளிலேயே அடிக்கடி அதிகாலைவேளைகளிலும் இரவு வேளைகளிலும் இத்தகைய கைது நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இத்தகைய சுற்றி வளைப்பின்போது சிறிலங்கா இராணுவம் கடற்படை மற்றும் விமானப்படையினர் இணைந்து சுற்றி வளைக்க, ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது வீட்டுக் கதவுகள் தட்டப்பட்டு ஆண்கள் பெண்கள் வெளியே அழைக்கப்பட்டு துயில் உடையில் நிற்க வைத்து அடையாள அட்டைகளையும் பொலிஸ் நிலையப் பதிவுகளையும் பொலிசார் பரிசீலனை செய்கின்றனராம்.

இதேவேளை வீடுகளுக்கு சோதனைஇட வென சிவிலுடையில் வருவோர் வீட்டிலிருப்போரின் பெயர்களைக்கூறி அழைத்துச் செல்கின்றனராம். இவ்வாறு அழைத்துச் செல்லப்படுவோர் திரும்பாததால் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் சென்று உறவினர்கள் விசாரித்தால் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்து வருகிறார்களாம்.

## விவசாய பீடத்திற்கு நூல்கள் நெதர்லாந்து அன்பளிப்பு

(கொழும்பு)

யாழ் பல்கலைக் கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விவசாயபீடத்திற்கென நெதர்லாந்துவாகெளிங்குவன்வேளாண் பல்கலைக் கழகத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களை கையளிக்கும் வைபவம் கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரகத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் நெதர்லாந்துத் தூதுவர் பஸ்ரின் ஆர், கோர்னர் நூல் தொகுதிகளை யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஆர் துரைராசாவிடம் கையளித்தார்.

சுமார் மூன்று வட்சம் ரூபா பெறுமதியான நூல் தொகுதிகளை வாகெளிங்குவன் பல்கலைக் கழக மாணவர் நல்லெண்ண அடிப்படையில் சேகரித்து உதவினர் என்பது குறிப்பிடத்தக்கது. அநேகமான நூல்கள் விவசாயம் சம்பந்தப்பட்டவை.

## பரிசளிப்பு விழா

சென் அன்ரனிஸ் கேயத்திற்காக புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் நடாத்திய, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் இன்று பாசையூர் சென் அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகவும் கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் மறவன் சிறப்பு விருந்தினராகவும் இவ் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்தேவி நடவடிக்கையின் போது

## கிளாலியில் கைதான வயோதிபர் விடுவிப்பு

(வடமராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கிளாலி யாழ்தேவி ஒப்பரேஷனின் போது கிளாலியில் வைத்து கைது செய்யப்பட்ட வயோதிபர் ஒருவர் பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டார்.

சிறிலங்கா இராணுவத்தினரால் கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டு இருபத்தைந்து தினங்கள் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இவர் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கிளாலியைச்சேர்ந்த சந்தியாபிள்ளை செபதேஸ் (வயது 54) என்பவரே விடுவிக்கப்பட்டவராவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இவரை 'வாதுவ' கப்பல் மூலம் கூட்டி வந்து உறவினரிடம் ஒப்படைத்தனர்.

(யோ)

## ஆசிரியை மரணம்

மீன் முள்ளு தொண்டையில் ஏறியதால் ஏற்பட்ட தொற்றினால் ஆசிரியை ஒருவர் மரணமானார்யாழ்ப்பாணம்பெருமாள் கோவிலடியைச்சேர்ந்த வரலஷ்மி அருளானந்தம்(33) என்பவரே இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று மரணமானவர் ஆவார்.

## 24 இராணுவத்தினர்

நீதவான் விஜயசிங்க முன்னிலையில் ஐந்து தினங்களாக நடைபெற்ற விசாரணையின் போது பத்துப்பேர் சாட்சியமளித்தனர்.

## கிளிநொச்சியில்

தில் மூன்று நாட்கள் மட்டும் கிளிநொச்சி அலுவலகம் திறந்து செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

## வடபிராந்திய

வும் விசுவாசமாகச் செயற்ப

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

பொன்னம்மான் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிஇன்று சனிக்கிழமை காலை பத்து மணியளவில் நடைபெறவுள்ளது. இ. குகராசா தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டியில் வலிகாமம் கோட்ட அரசியல் துறை இணைப் பொறுப்பாளர் செல்வன், வலிகாமம் கோட்ட சமூக மேம்பாட்டு பிரிவு மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்விகுயிலினிசண்டிலிப்பாய் வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. வெண்ணிலவன் கிராமியப் பொறுப்பாளர் தமிழினியன், சங்கானை காவற் பணிமனை பொறுப்பாளர் கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

பதவியில் நியமிக்கப்படவுள்ளார் என்பது குறித்தும்

# மாரீசன்கூடல் பகுதியில் பல வீடுகள் தகர்ப்பு

## விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

மாரீசன்கூடல் பகுதிகளில் உள்ள வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்

கப்பட்டு வருகின்றன. ஆட்கள் இல்லாத வீடுகளே இவ்வாறு தகர்க்கப்பட்டு வருகின்றன.

யற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தற்போது இளவாலையில் தங்கி வருபவர்கள் பலருக்கும் பல்

சாங்கத்தின் தவறான கொள்கையே ஆகும். வடக்கிலுள்ள மக்களை விடுதலைப்புலிகள் என ஒதுக்கி அவர்களுக்குப் பல பொருட்கள் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளது. மூன்று வருடகாலமாக வடக்கிற்கு மின்சாரம் இல்லை. ஏன் அவர்களுக்கு மின்சாரம் வழங்கக் கூடாது.'' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுதந்திரக் கட்சியினருக்கு இனப்பிரச்சினை குறித்தும், தமிழ் மக்கள் மீதும் எழுந்துள்ள இத்திடீர்அக்கறையானது தமிழ் மக்கள் படும் கஷ்டத்தின் பால் எழுந்த இரக்கமாகவோ, அன்றி யுத்தத்தினால் நாடு பெரும் சீரழிவை எதிர்நோக்குகின்றது என்ற கவலையின் காரணமாகவோ எழுந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், இதுவரை முழுமையான இனவாத அரசியலை நடத்திவந்ததோடு, தற்பொழுதும் ஹெல உறுமய போன்ற சிங்கள பேரினவாத அமைப்பின் உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டும் உள்ளது.

இந் நிலையில், சுதந்திரக்கட்சியின் இந் நிலைப்பாடு மாற்றத்திற்கு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடே காரணமாக இருக்குமென கருத இடமுண்டு. அதாவது இலங்கையில் இனப் பிரச்சினை என்பது இல்லை. பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது என்ற டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாடானது இதுவரை ஐ தே.கவிற்கு வாக்களித்த தெற்கில் வாழும் தமிழ் மக்களின் ஒருபகுதியினரை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வந்த இவர்கள் அடுத்த கட்ட நிலைகுறித்து தெளிவின்றிக் குழம்பிப்போயுள்ளனர்.

அதாவது டி பி. விஜேதுங்கா இனப்பிரச்சினையே இல்லை என்ற ரீதியில் பேசிவருவது தமிழர் விவகாரத்தில் இனிப்பேச்சிற்கே இடமில்லை என்ற அறிவிப்பிற்கு ஒப்பானதே ஆகும் டி.பி.யின் இந்நிலைப் பாட்டால் இதுவரை ஐ.தே.கவை நம்பியிருந்த தமிழர்கள் நட்டாற்றில் கைவிடப்பட்டுள்ளனர். இந்நிலையில் தொடர்ந்தும் ஐக்கிய தேசிய கட்சியை நம்புவதால் பயனில்லை என்ற ரீதியில் குறிப்பிட்ட தொகையினர் சுதந்திரக்கட்சியை நாடக்கூடும். மக்களுடன் தொடர்பு அற்றவர்களாயினும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் ஏற்கனவே சுதந்திரக்கட்சியுடன் தொடர்பு கொள்ளத்தொடங்கியுள்ளமை இதற்கான உதாரணமாகும்.

இதனை பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியிலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சி முற்படுவதாகத் தெரிகிறது. இதற்கு ஏற்றால் போலவே இன்று வடக்கு - கிழக்கில் நிலவும் பிரச்சினையை இனப்பிரச்சினை என சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தோடு தமிழ் பிரதேசத்தின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையை தளர்த்தவும் கோரியுள்ளனர். சுதந்திரக்கட்சியின் இந் நிலைப்பாடானது ஒருவேளை சிறியளவு லாபத்தை அவர்களுக்குக் கொடுக்கவும் கூடும்.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இக் கொள்கை மாற்றம் எந்தளவிற்கு இனப்பிரச்சினையை தீர்க்க உதவும் என்பதும் அதன் பயனாக சமாதானம் உருவாகும் என்பது சந்தேகமானதே ஏனெனில் சுதந்திரக்கட்சியின் இப்பேச்சுக்கள் வாக்குவேட்டைக்கான தந்திரம் என்றே கடந்தகால வரலாற்றை ஆராய்ந்தால் முடிவிற்கு வரமுடியும். அவ்வாறு இல்லாமல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உண்மையாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புமானால் அது வரவேற்கத்தக்கதே ஆகும். ஆனால் சுதந்திரக்கட்சியால் அது முடியுமா என்றால், அதற்கு இல்லை என்பதே பதிலாகும். ஏனெனில் சிறிலங்கா அரசினதும், சுதந்திரக் கட்சியினதும் தர்க்க பூர்வமான வளர்ச்சி அதையே காட்டி நிற்கின்றது.

---

பங்கு பற்றுகின்றனர். இலவசப்பயிற்சி முறையினால் பின் தங்கிய கிராமங்களில் வேலை வாய்ப்பற்றிருக்கும் யுவதிகளுக்கு சுய வேலை வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்பு எட்டியுள்ளதென சர்வோதய பிரதேச இணைப்பாளர் செல்வி கி. யோகேஸ்வரி தெரிவித்துள்ளார். (41)

---

மைதானத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகவும் கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் மறவன் சிறப்பு விருந்தினராகவும் இவ் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

---

சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நூல் தொகுதிகளை வாகெனிங்குவன் பல்கலைக்கழக மாணவர் நல்லெண்ண அடிப்படையில் சேகரித்து உதவினர் என்பது குறிப்பிடத்தக்கது. அநேகமான நூல்கள் விவசாயம் சப்பந்தப்பட்டவை.

---

# மாரீசன்கூடல் பகுதியில் பல வீடுகள் தகர்ப்பு

## விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

மாரீசன்கூடல் பகுதிகளில் உள்ள வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தரை மட்டமாக்கப்பட்டு வருகின்றன

இவ்வாறு இளவாலையைச் சேர்ந்தவரும் பதினைந்து மாதங்களாக சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்குண்டு இளவாலையில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட மிக்கேல்பிள்ளை கிறிஸ்ரினா எமது வடமராட்சி செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது ''மாரீசன்கூடலில் ஒரு சில வீடுகளைத் தவிர நூற்றுக் கணக்கான வீடுகள் குண்டு வைத்தும் இடித்தும் தகர்க்கப்பட்டு வருகின்றன. ஆட்கள் இல்லாத வீடுகளே இவ்வாறு தகர்க்கப்பட்டு வருகின்றன.

அங்குள்ள வீடுகளை தகர்க்கும்போது பெறுமதியான வீட்டு பொருள்களை இராணுவம் லொறிகளில் ஏற்றிச் செல்கிறது பெறுமதியான பொருள்களை இராணுவம் எடுத்துவிட்டு வீடுகளை தரை மட்டமாக்கி வருகிறது.

இளவாலைப் பகுதியில் இராணுவ சுற்றிவளைப்பு நடைபெற்றபோது நான் பண்டத்தரிப்பு காடாப்புலத்தில் வைத்து பிடிபட்டேன். எனது நோய்க்கு காடாப்புலம் ஆஸ்பத்திரியில் மருந்து எடுத்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இராணுவம் என்னை பலாத்காரமாக இழுத்துச் சென்று இளவாலை முகாமில் தங்க வைத்தது.

இதே நிலையில் தான் பலர் கைது செய்யப்பட்டு தேவையற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தற்போது இளவாலையில் தங்கி வருபவர்கள் பலருக்கும் பல்வேறு வகையான நோய்கள் பீடித்துள்ளன. இப் பகுதி எங்கும் மனித நடமாட்டமற்ற ஒரு சூனியப் பிரதேசமாகவே காணப்படுகிறது. மக்களுக்கு பதிலாக இராணுவமே இங்கு அதிகளவில் காணப்படுகின்றது'' என்றார். (யோ)

---

பாதிக்கப்பட்ட

கழக மாணவர்கள் அன்றைய தினம் தமது விரிவுரைகளை முற்றாகப் பகிஷ்கரிப்பதுடன் ஊர்வலத்திலும் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி மாணவர்களின் ஊர்வலத்திற்கு மாணவர்களின் ஆதரவைத் திரட்டும் முகமாக பாடசாலைகள் தோறும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து விளக்கக் கூட்டங்கள் நேற்று முதல் நடைபெற்று வருகின்றன.

இவ் ஊர்வலத்தின்போது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு, ஜனாதிபதி ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன. இம் மகஜர்கள் ஊர்வலத்தின் போது அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு அசோக்குமார், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதி பியாட் சுவீஸர் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ். பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளன.

---

205 கோடி

மாக கேட்கப்பட்டுள்ளது. கடற்படையினர் மேலதிகமாக 29கோடி ரூபாவைகோரியுள்ளனர் விமானப்படை 28கோடி 10 லட்சத்து 63 ஆயிரத்து 32 ரூபாவை கோரியுள்ளது பொலிஸ் மேலதிகமாக 62 கோடியே 22 லட்சம் ரூபாவை கோரியுள்ளது.

இவற்றை கோருவதான குறை நிரப்பு பிரேரணையில் ஜனாதிபதி விஜேதுங்க கையெழுத்திட்டுள்ளார். அடுத்த ஆண்டுக்காக இராணுவத்திற்கு 1700 கோடிரூபாவும், விமானப்படைக்கு1400கோடி ரூபாவும், பொலிசுக்கு 430 கோடி ரூபாவும் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. திடமான பாதுகாப்பு செலவினம் அடுத்த மாதம் 10ஆம் திகதி அறிவிக்கப்படும்.

---

சுய நிர்ணய

குறிப்பிட்டார்.

சிங்கள தீவிரபோக்கு உள்ளவர்களின் சவாலை அரசு எதிர் நோக்கவேண்டியிருப்பதால் அது இராணுவத்தீர்வை நாடிநிற்கின்றது என பி.பி.ஸி கொழும்பு செய்தியாளர் தெரிவித்தார்.

---

இளவாலையில்

(வயது 78) மாதகல் அவரது மனைவி முத்தையா செல்லம்மா (வயது 68) ஆகியோரே இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களில் கண் தெரியாத இரண்டு ஆண்களும். நடக்க முடியாத ஒரு பெண் மற்றும் வயோதிபர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் 'வாதுவ' கப்பலில் கூட்டி வரப்பட்டனர். (யோ)

---

யாழ்.

ரூபாவையும் மானியங்கள் ஆணைக்குழு வழங்கினால் மட்டுமே பல்கலைக்கழக செலவினங்களை சமாளிக்கமுடியும் என யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பற்றாக்குறை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ். பல்கலைக் கழகம் கடிதம் ஒன்றை அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது. (நி)(க)

---

காலத்தில் பயிரிட்டு

ஞாலத்தில் உயர்வடைவோம்

---

ஏறியதால் ஏற்பட்ட தொற்றினால் ஆசிரியை ஒருவர் மரணமானார்யாழ்ப்பாணம்பெருமாள் கோவிலடியைச்சேர்ந்த வரலஷ்மி அருளானந்தம்(33) என்பவரே இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று மரணமானவர் ஆவார்.

---

24 இராணுவத்தினர்

நீதவான் விஜயசிங்க முன்னிலையில் ஐந்து தினங்களாக நடைபெற்ற விசாரணையின் போது பத்துப்பேர் சாட்சியமளித்தனர்.

---

கிளிநொச்சியில்

தில் மூன்று நாட்கள் மட்டும் கிளிநொச்சி அலுவலகம் திறந்து செயற்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. (நி)

---

வடபிராந்திய

வும் விசுவாசமாகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போது வடபிராந்திய இராணுவத் தளபதியாக கடமையாற்றி வரும் மேஜர் ஜெனரல் ரொகான் தலுவத்தை வடக்கிலிருந்து இடமாற்றப்பட்டு, எந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் என்பது குறித்து இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

மேலும் யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக கடமையாற்றி வந்த பிரிகேடியர் யர் குலதுங்க தற்பொழுது சுகயீன முற்றிருக்கிறார். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரிகேடியர் நமுனி யாழ். பிராந்திய பதில் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் இப்பதவி காலக் கிரமத்தில் நிரந்தரமாக்கப்படவுள்ளது.

சுகயீன முற்றிருக்கும் பிரிகேடியர் குலதுங்க யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றப்பட்டு அடுத்ததாக எங்கே எப் பதவியில் நியமிக்கப்படவுள்ளார் என்பது குறித்தும் இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இவர் சிசில் வைத்திய ரெட்னாவின் கட்டளைகளை முழுமையாக அனுசரிப்பதில்லை என்ற குற்றச் சாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் நிலவி வருகிறது. இதனாலேயே இவர் இடமாற்றப்படவிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாற்றங்களைப் போன்று இராணுவத்தின் இடைநிலை அதிகாரிகள் மட்டத்திலும் பல்வேறு மாற்றங்களைச் செய்வதற்கு இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ்வாறான படை அதிகாரிகளின் மாற்றத்தினால் இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னாவின் கட்டளையிடல் மற்றும் படையணிகளை வழிநடத்துதல் போன்றவை இலகுவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)(நி)

---

பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை பத்து மணியளவில் நடைபெறவுள்ளது. இ. குகராசா தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டியில் வலிகாமம் கோட்ட அரசியல் துறை இணைப் பொறுப்பாளர் செல்வன், வலிகாமம் கோட்ட சமூக மேம்பாட்டு பிரிவு மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்விகுயிலினிசண்டிலிப்பாய் வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. வெண்ணிலவன் கிராமியப் பொறுப்பாளர் தமிழினியன், சங்கானை காவற் பணிமனை பொறுப்பாளர் கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 21.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11318

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்: 27-6821, 27-6524.

### 22.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11336

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3628, 26 547, 24-5779, 26-2941, 26 3162, 22-3938, 24 5177, 27-1380, 29-9992, 24-4957, 26-8497, 40-2829, 27-9649, 28-0854.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0649, 24-0878, 41-7865.

## உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

வீடியோ படப் பிரதிக்கு மிகக் குறைந்த வாடகை ஒரு பிரதிக்கு 20/- மட்டும். எங்கே தெரியுமா? நல்லூரில் – வீடியோ விஜய்.

★ புதிய பழைய திரைப்படங்களை மிகக்குறைந்த கட்டணத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ள வீடியோ விஜய்.

★ புதிய பாடல்கள் [கொம்பக் டிக்ஸ்இல்இருந்து] பழைய பாடல்கள் அனைத்தும் குறித்த தவணையில் சிறந்த முறையில் பதிவு செய்து பெற்றுக்கொள்ள வீடியோ விஜய்.

★ ரீவி — டெக் — கேசற் றக்கோடர் — றேடியோ மற்றும் அனைத்து மின்சார உபகரணங்களும் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் திருத்தி பெற்றுக் கொள்ள வீடியோ விஜய்.

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம் பிறந்தநாள்—பூப்புனித நீராட்டு விழா சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திடவும் இன்றே நாடுங்கள்

**வீடியோ விஜய்**

**113 கோவில் வீதி - நல்லூர்.**

(கைலாயபிள்ளையார் கோவிலுக்கும் நல்லூர் கோயிலுக்கும் மத்தியில்.)

**மேது நிறுவனம் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.**

(6356)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



# மூன்று போராளிகள் வீரச்சாவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வெருகல் முகத்துவாரம் என்றஇடத்தை கடந்த 20ஆம் திகதி காலை திடீரெனச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

இதேவேளை இச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி மற்றுமிரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவடைந்த மேஜர் ரவீந்தர் [கனகசபை மனோகரன் பாடசாலை வீதி, சித்தாண்டி, மட்டக்களப்பு], 2ஆம் லெப்டினன்ட் கஜேந்திரகுமார் / றொபின் [சபாபதி சௌந்தர்ராஜன் ஊரியன் கட்டு, வாகரை, மட்டக்களப்பு], வீரவேங்கை சத்தியநாதன் / விக்டர் [யோகானந்தம் நோயல் - சுகுணராஜ் கல்லடி, மட்டக்களப்பு] ஆதரவாளர் புலேந்திரன் ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



மேஜர் ரவீந்தர்



2ஆம் லெப்டினன்ட் கஜேந்திரகுமார்/றொபின்




அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

**மாதாந்த இசை நிகழ்ச்சியும் வாணி விழாவும்**

பூபாலசிங்கம் புத்தகசாலை (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) ஆதரவில்

**இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.**

காலம்: **24.10.1993** ஞாயிறு மாலை 3 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 3-00 — 4-30 விஜயதசமி பூஜையும் ஆரம்ப நாள் வகுப்பும்

4-30 — 4-40 மிருதங்க இசை
ப. அபராஜிதன், இ பரதன், சி. கங்கா, சு. யுகன்

4-40 — 5-00 வீணை இசை
சரோஜினி சுப்பிரமணியம், சிவசக்தி ஜெகதீஸ் வரக்குருக்கள் வித்யாலக்ஷ்மி சிவகுமார சர்மா,
ப. ரதிரூபன் — மிருதங்கம்

5.00 — 5 10 மிருதங்க இசை
சி அகிலன் நா.சுஜீவன், ஜெ.சங்கர், சி.சிவசிவா, ச. சுதர்சமோகன், ந.சிவசங்கர்.

5.10 — 5.30 வாத்திய பிருந்தா
திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரனின் மாணவிகள்

5.30 — 5.50 பாட்டு
அஷ்டலஷ்மி இராமசாமி, லொயிஸ் கனிஷ்யா தூசைப்பிள்ளை, சரோஜினி சுப்பிரமணியம், கமலாஜோதி, எஸ் ஸ்ரீதேவி நடராஜசர்மா, றேமளா குமாரசாமி
ரீ. றேணுகா - வயலின், பி ரதிரூபன் - மிருதங்கம்

5.50 — 6.50 புல்லாங்குழல் இசை
டாக்டர் ரீ. கெங்காதரன் - புல்லாங்குழல்
திரு வி. கே. குமாரசாமி வயலின்
திரு எஸ். மகேந்திரன் மிருதங்கம்

6 50 — 7 10 மங்கள விளக்கேற்றல்
1. திரு. இராஜன் பூபாலசிங்கம், வர்த்தகர் (பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.)
2. திரு. எஸ். வி சிவகுருநாதன், வர்த்தகர் [வி. எம். எஸ். நிறுவனம், யாழ்.]

தலைமையுரை: பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் அவர்கள் (பிரதமகுரு, சுதுமலை அம்மன்தேவஸ்தானம்,
பிரதமவிருந்தினர்உரை: பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் அவர்கள் [தலைவர், பொருளியல்துறை யாழ். பல்கலைக்கழகம்]

7.10 — 8.10 பாட்டு
திருமதி ஹேமாவதி கபிலதாஸ் - பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
திரு. கே. கண்ணதாஸன் - மிருதங்கம்
திரு. பி. ரதிரூபன் - கடம்

8.10 — 9.10 சிறப்பு நிகழ்ச்சி
பரதநாட்டியம் இளங்கலைஞர் மன்ற மாணவிகள்
நட்டுவாங்கம் நாட்டிய விஷாரத,
விக்கினேஸ்வரி சரவணமுத்து
சாரதா சச்சிதானந்தம் - பாட்டு
திரு. ஆர். எஸ்.கேசவமூர்த்தி - வயலின்
திரு எஸ். மகேந்திரன் மிருதங்கம்
ம. தாணுநாதசர்மா - புல்லாங்குழல்

**விஜயதசமி பூஜையும், நாள் வகுப்பும்**

24. 10. 93 ஞாயிறு மாலை 3.00 — 4 00 மணிவரை நாள் வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பெறும் ஒவ்வொரு சனி, ஞாயிறு நாட்களில் காலை 8.00—12.00



## மாபெரும் புகைப்படக் கண்காட்சி

எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களைச் சித்திரிக்கும் நிகழ்வு

**நிகழ்ச்சி நிரல்**

காலம்: 23-10-1993 சனிக்கிழமை தொடக்கம் 24-10-1993 ஞாயிற்றுக்கிழமை வரை.

இடம்: கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

தலைமை: வை. செல்வம் அவர்கள் (பொறுப்பாளர், வி. பு. மா. அ. யாழ். கோட்டம்)

மங்கள விளக்கேற்றல்:

1. திரு. ஜவான் அவர்கள் (பொறுப்பாளர், நிதர்சனம்)
2. திரு. யோகன் அவர்கள் (துணைப்பொறுப்பாளர், புகைப்படப்பிரிவு)
3. திரு. மு. இராமலிங்கம் அவர்கள் (கொத்தணி அதிபர், நல்லூர்)

தேசியக் கொடியேற்றல்;
செல்வி விதுஷா (தளபதி மகளிர் படையணி)
அமைதி வணக்கம்

கண்காட்சி திறந்து வைப்பவர்:
திரு. இளங்குமரன் அவர்கள் (பொறுப்பாளர், கல்விமேம்பாட்டுக் கழகம்)

**ஒளிப்படக் காட்சிகள்:**

**1. தாயகக்கனவு 2. போரம்மா 3. ஒளிவீச்சு**

23-10 1993க்கும், 24 10-1993க்கும் மாலை 7.00மணியில் இருந்து காட்சி காட்டுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அன்பளிப்பு - 5 ரூபா, 10 ரூபா**

நன்றி.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு.

(சி-7768)



## வாணி விழாவும் புதிய நடன வகுப்பு ஆரம்பமும்

ருக்மினி நர்த்தனாலயம் வாணிவிழாவை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

காலம்: 23-10-1993 நேரம்: பி. ப. 4-30 மணி

இடம்: நல்லூர் இளம் கலைஞர் கலாமண்டபம்

பிரதம விருந்தினர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைவர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக் கழகம்.

சிறப்பு விருந்தினர்: கலாநிதி சபா. ஜெயராஜா தலைவர், இராமநாதன் நுண்கலைத் துறை.

கௌரவ விருந்தினர்: இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் றேமன்

(இராமானுஜம் சீதாராம்)

(1990 கட்டுவனில் நடந்த சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்தார்.)

மலர்வு 09-04-1968

வீரச்சாவு: 23- 1- 1990

புயலென வீசி ... புலியெனப் பாயும்
தமிழ் மறவர்கள் வாழும் ...
தமிழ்த் தாயகப் பூமியிது
பயமின்றி வாழ்ந்த பைந்தமிழன்
தரணியைத் தன்னது என்று ...
சீறிப் பாய்ந்த சிங்களப் படையினை
சிதைத்திடப் பாய்ந்தது புலிப்படை
தமிழர் வாழ்வினைச் சீரழித்த
பௌத்த சீலர்கள் வாழ்ந்த
பலாலியைப் பாழாக்கும் பணிசெய்த
படையணியில்
கப்டன் றேமன் — நீ காட்டிய
வீரம் எத்தனை!
பலாலியில் பகைவர்கள் வீசிய குண்டுகள்
உன்னைப் பலி கொண்டது உண்மைதான்
பலியான புலிவீரன் உன் ஆயுதம்
கரம்பற்றி நிற்கும் புலிகள்
இப்பூமியை மீட்பர் என்ற
உறுதியோடு ஆண்டுகள்
மூன்றில் உன் நினைவுகளை
சுமந்து கொள்கிறோம்.

குடும்பத்தினர்
நண்பர்கள்.

(6344)

---

6 50 — 7 10 மங்கள விளக்கேற்றல்
1. திரு. இராஜன் பூபாலசிங்கம், வர்த்தகர்
(பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.)
2. திரு. எஸ். வி. சிவகுருநாதன், வர்த்தகர்
[வி. எம். எஸ். நிறுவனம், யாழ்.]

தலைமையுரை: பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் அவர்கள் (பிரதமகுரு, சுதுமலை அம்மன்தேவஸ்தானம்,

பிரதமவிருந்தினர் உரை: பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் அவர்கள் [தலைவர், பொருளியல்துறை யாழ். பல்கலைக்கழகம்]

7.10 — 8.10 பாட்டு
திருமதி ஹேமாவதி கபிலதாஸ் - பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
திரு. கே. கண்ணதாஸன் - மிருதங்கம்
திரு. பி. ரதிரூபன் - கடம்

8.10 — 9.10 சிறப்பு நிகழ்ச்சி
பரதநாட்டியம் இளங்கலைஞர் மன்ற மாணவிகள்
நட்டுவாங்கம் நாட்டிய விஷாரத.
விக்கினேஸ்வரி சரவணமுத்து
சாரதா சச்சிதானந்தம் - பாட்டு
திரு. ஆர். எஸ்.கேசவமூர்த்தி - வயலின்
திரு எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
ம. தாணுநாதசர்மா - புல்லாங்குழல்

**விஜயதசமி பூஜையும், நாள் வகுப்பும்**

24. 10. 93 ஞாயிறு மாலை 3.00 — 4 00 மணிவரை நாள் வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பெறும் ஒவ்வொரு சனி, ஞாயிறு நாட்களில் காலை 8.00—12.00 மணிவரை சிறந்த இசைக் கலைஞர்களால் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் என்பன பயிற்றுவிக்கப்பெறும்.

இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

(6358)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| — | — |
| 20 | 09 |
| — | — |
| 04 | 09 |
| — | — |
| 1974 | 1993 |



## 2-ம் லெப். பணம்பரன்

தங்கராசா (தெய்வேந்திரம்) சதீஸ்வரன்

[யாழ்/கனகரெட்ணம் மகாவித்தியாலயமாணவன்]

மரணங்கள் முடிவல்ல மாவீரன் பாதையிலே
கல்லறையும் பிரசவிக்கும் பலநூறு வீரர்களை
நிகரற்ற தலைமையிலே நீநின்று போர்புரிந்தாய்
நின்புகழும் ஓங்குமாடா தமிழீழம் மலர்கையிலே


அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 23-10-1993 இன்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்ம ஈடேற்றக் கிரியைகளில் கலந்து பிரார்த்திக்குமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

நாவலர் றோட்,
அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம்.

பெற்றோர்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மற்றும் உறவினர்கள்.

(6350)

---



2ஆம் லெப்டினன்ட்
கஜேந்திரகுமார்/றொபின்



வீரவேங்கை
சத்தியநாதன்/ விக்டர்

---

## பூப்பந்து போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில் யாழ். கோட்ட மாணவிகளுக்கான பூப்பந்துச் சுற்றுப் போட்டி இன்று காலை 8.00 மணி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தொண்டர் சேவைக்கருத்தரங்கும், செஞ்சிலுவைச் சங்க. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு ஆகியவற்றைப் பற்றிய கருத்தரங்கமும் இன்று முற்பகல் 10.00 மணிக்கு கோப்பாய்ப் பிரி காரியாலயத்தில்நடைபெறும். தொண்டர்கள், உறுப்பினர்கள் நலன்விரும்பிகள் அழைக்கப்படுகின்றனர்.

### பரிசளிப்பு விழா

அராலி வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை பெற்றோர்தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. மு. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கானை கோட்டக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்கள் வழங்கவுள்ளார்.

---

நன்றி.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு.

(சி-7768)

---

# வாணி விழாவும் புதிய நடன வகுப்பு ஆரம்பமும்

ருக்மினி நர்த்தனாலயம் வாணிவிழாவை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

காலம்: 23-10-1993 நேரம்: பி. ப. 4-30 மணி

இடம்: நல்லூர் இளம் கலைஞர் கலாமண்டபம்

பிரதம விருந்தினர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த்துறை யாழ்
பல்கலைக் கழகம்.

சிறப்பு விருந்தினர்: கலாநிதி சபா. ஜெயராஜா
தலைவர், இராமநாதன் நுண்கலைத்
துறை.

கௌரவ விருந்தினர்: இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ
என், வீரமணி ஐயர்

தலைவர்: சங்கீதபூஷணம்
பொன். சுந்தரலிங்கம்
தலைவர், இளம் கலைஞர் மன்றம்

★ மேற்படி நிறுவனத்தில் புதிய நடன வகுப்புகள் 24-10-93ஞாயிறு விஜயதசமியன்று காலை 9 மணி முதல் 11 மணி வரை ஆரம்பிக்கப்படும்.

ருக்மினி நர்த்தனாலயம்
142, பலாலி வீதி,
(பல்கலைக்கழகச் சந்தி)
யாழ்ப்பாணம்.

தகவல்:
நாட்டிய விஷாரத்
செல்வி விக்னேஸ்வரி
சரவணமுத்து

(சி-7762)

---

# யா/நவாலி ஸ்தான அரசினர் பாடசாலை நடாத்தும் வாணி விழா

**காலம்: 23-10-93 இன்று பிற்பகல் 1 மணி**

**இடம்: சோமசுந்தரர் அரங்கு** [பாடசாலை மண்டபம்]

விசேட நிகழ்ச்சி

## பட்டி மண்டபம்

**விடயம்** - தமிழர்களின் கலாசாரத்தில் தமது கலாசாரத்தை திணிப்பதில் முக்கியம் பெறுபவர்கள் ஐரோப்பியர்களா? சிங்களவர்களா?

| ஐரோப்பியர்கள் | | சிங்களவர் |
|---|---|---|
| செ. நடேசகாந்தன் | — | எஸ். வாமன் |
| து. சிவஞானம் | — | ந. ஆனந்தகுமார் |
| ஜெ. கோக்கலே | — | செ. கிரிசங்கர் |

நடுவர்

கே எஸ் முத்துலிங்கம்

(6355)

-விழாக் குழு

அன்பளிப்பு — அ. வசந்தகுமார்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.